16.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## இரு மடங்கு வருவாய்க்கு:நீடித்த - நிலையான கரும்பு சாகுபடி!



விழுப்புரம்: கரும்பு சாகுபடியில் குறைந்த நீர் பாசனத்தில் இரு மடங்கு வருவாய் பெற நீடித்த- நிலையான சாகுபடி முறையை (எஸ்.எஸ்.ஐ) விவசாயிகள் பின்பற்றலாம்.

இயல்பான கரும்பு சாகுபடி முறையில், 7 முதல் 9 மாத வயதுடைய 3 பருவ விதைக் கரணைகளை ஹெக்டேருக்கு 16 ஆயிரம் எண்ணிக்கை என்ற அளவில் விவசாயிகள் பயன்படுத்துவர்.

பாருக்கு பார் இரண்டரை முதல் 3 அடி இடைவெளி விட்டு விதைக் கரணைகளை நடுவர். வாய்க்கால் மூலம் நீர் பாய்ச்சப்படும். பாய்ச்சலும், காய்ச்சலும் ஏற்படுவதால் பயிரின் வளர்ச்சி குறைகிறது. களை பிரச்சனையும் அதிகம் ஏற்படுகிறது. இயல்பான முறை சாகுபடியில் அறுவடை இயந்திரங்களை பயன்படுத்த முடியாது.

இயல்பான முறையில் முதல் வருடம் மட்டுமே ஊடு பயிர்கள் சாகுபடி செய்ய

முடியும்.

மகசூலும் ஏக்கருக்கு 40 முதல் 50 டன் வரை மட்டுமே கிடைக்கும். ஆட்கள் கூலி உயர்வு, உரச்செலவு மற்றும் இதர செலவினங்கள் என ரூ.60 முதல் 65 ஆயிரம் வரை செலவாகும். இதனால் ஏக்கருக்கு நிகர லாபம் ரூ.30 முதல் 40 ஆயிரம் வரையே கிடைக்கிறது.

நீடித்த-நிலையான கரும்பு சாகுபடி:

ஆனால், நீடித்த-நிலையான கரும்பு சாகுபடியை பொருத்தவரை விதைக் கரணைகளுக்குப் பதில் தரமான விதைக் கரும்பில் இருந்து ஒரு பருவ கரணைகள் எடுக்கப்பட்டு குழித் தட்டுகளில் நடப்பட்டு நிழல் வலைக் கூடாரங்களில் வளர்க்கப்படுகின்றன.

ஆலைகளே வழங்கும் தரமானக் கன்றுகள்: தரமான கன்றுகளை உற்பத்தி செய்து சர்க்கரை ஆலைகளே விவசாயிகளுக்கு வழங்குகின்றன. 25 முதல் 35 நாள் வயதுடைய தரமான நாற்றுகள் நன்கு உழுது தயார் செய்யப்பட்ட நிலத்தில் பாருக்கு பார் 5 அடி மற்றும் செடிக்குச் செடி 2 அடி இடைவெளியில் நடப்படுகிறது.

குறைந்த நீர்ப் பாசனம்:

அடி உரமாக ஏக்கருக்கு ஜிப்சம் 200 முதல் 300 கிலோ சூப்பர் பாஸ்பேட் 250 கிலோ மற்றும் சிங்க் பாஸ்பேட் 15 கிலோ இட வேண்டும். நீர்ப்பாசனத்தை பொறுத்தவரை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் நாள் ஒன்றுக்கு மண்ணின் தன்மையைப் பொறுத்து 3 முதல் 4 மணி நேரம் பாய்ச்சினால் போதுமானது.

நீராதாரம் பாதுகாப்பு:

இந்த சாகுபடி முறைகளைக் கையாளுவதால் 40 முதல் 50 சதவீதம் வரை நிலத்தடி நீர்மட்டம் பாதுகாக்கப்படுகிறது. வருடம் முழுவதும் சீரான பாசனம் கிடைப்பதால் ஏக்கருக்கு 70 முதல் 80 மெட்ரிக் டன் மகசூல் கிடைப்பதோடு ஊடு பயிரிலும் கூடுதல் வருவாயாக, ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை கிடைக்கிறது. இதில், இயந்திர அறுவடை செய்வதால் பெரும் பலன் கிடைக்கும். பெருமளவு வேளாண் தொழிலாளர்கள் பிரச்சினை குறைந்திடும்.

தற்போதைய சிறப்புப் பருவத்தில் பயிரிடலாம்: தற்சமயம் சிறப்புப் பருவத்தில் ஜூன் - ஜூலை மாதங்களில் கரும்பு நடவு செய்திடும் விவசாயிகள் நீடித்த-நிலையான கரும்பு சாகுபடி தொழில் நுட்பங்களை கடைப்பிடித்து பயன்பெறலாம்.

தமிழக அரசு ஊக்குவிப்பு மானியம்: கரும்பில் அதிக லாபம் தரும் வகையில்,

தமிழக அரசு நீடித்த-நிலையான கரும்பு சாகுபடி திட்டம் என்ற புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தி வேளாண் துறை மூலம் கடந்த 4 ஆண்டுகளாக தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. இந்த வகை சாகுபடியை ஊக்குவித்திட தமிழக அரசு வேளாண் துறை மூலம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சர்க்கரை ஆலைகள் மூலம் தரமான கரும்பு நாற்றுகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்வதற்கு ஏதுவாக நிழல் வலைக் கூடங்கள் நிறுவி உள்ளது. சொட்டு நீர்ப்பாசனம் அமைத்திட அதிகபட்சம் ஹெக்டேருக்கு ரூ.55 ஆயிரத்து 828 என்ற அளவில் மானியம் வழங்குகிறது என விழுப்புரம் வேளாண் உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் தெரிவித்தார்.

## ஹெக்டேருக்கு 6 டன் மகசூல் தரும் டிகேஎம் 13 நெல் ரகம்



திருவள்ளூர்: தற்போதைய பருவத்தில் டிகேஎம் 13 ரக நெல்லைப் பயிரிட்டால் ஹெக்டேருக்கு 6 டன் மகசூல் கிடைக்கும் என்று, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து நெல் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்டசெய்திக்குறிப்பு:

திருவள்ளூரை அடுத்த திரூரில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் நெல் ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது.

இந்த நிலையத்தில் கடந்த 2015-ம் ஆண்டு டிகேஎம் 13 என்ற நெல் ரகம் வெளியிடப்பட்டது. இந்த ரகமானது பிபிடி 5,204 ரகத்துக்கு மாற்று ரகமாகும். இதன் வயது 130 நாள்களாகும்.

இது காவிரி டெல்டா பகுதியில் தாளடிப் பட்டத்துக்கும் (செப்டம்பர் விதைப்பு) இதர மாவட்டங்களுக்கு சம்பா பட்டத்துக்கும் (ஆகஸ்ட்- செப்டம்பர்) விதைப்பு

ஏற்றது.

இது ஹெக்டேருக்கு 5,938 கிலோ மகசூல் கொடுக்க வல்லது. மத்திம, சன்ன ரக வெள்ளை அரிசியைக் கொண்டது. அதிக அரைவைத்திறன், முழு அரிசி காணும் திறன், சிறந்த சமையல் பண்புகளுடன், நல்ல சுவையும் கொண்டது இந்த நெல்.

இது இலைச் சுருட்டுப்புழு, குருத்துப்பூச்சி, பச்சை தத்துப்பூச்சி, குலைநோய், செம்புள்ளி நோய், இலை உறை அழுகல் நோய்களுக்கு நடுத்தர எதிர்ப்புத்திறன் கொண்டது. நெல்கதிர் சாயாத தன்மை கொண்டது.

இந்த டிகேஎம் 13 நெல் ரகத்தின் விதையானது திரூர், நெல் ஆராய்ச்சி நிலையத்தில் 4 டன் இருப்பு உள்ளது. இதன் விலை கிலோ ரூ. 30 ஆகும். ஜூலை முதல் வாரத்திலிருந்து விதை விநியோகிக்கப்பட உள்ளது.

விதை நெல் தேவைப்படுவோர், திரூர், நெல் ஆராய்ச்சி நிலையத்தை நேரிலோ அல்லது 044-2762 0233 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

குமரி மாவட்டத்தில் 6,500 ஹெக்டேரில் கன்னிப்பூ சாகுபடி செய்ய இலக்கு

குமரி மாவட்டத்தில் 6,500 ஹெக்டேரில் கன்னிப்பூ சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 10 நாள்களாக பெய்துவரும் கனமழையினால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு அணைகளின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது. மாம்பழத்துறையாறு அணை முழுக்கொள்ளளவை எட்டியுள்ளது. சானல்களிலும், ஆறுகளிலும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் வாய்க்கால்கள் நிரம்பி வருகின்றன.

செவ்வாய்க்கிழமை மழை குறைந்துள்ள நிலையில், அணைக்கு நீர்வரத்தும் குறையத் தொடங்கியுள்ளது. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை காலை 38.40 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 821 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 72.10 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 582 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 158 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

சிற்றாறு அணைகளின் நீர்மட்டம் 13 அடியை எட்டியுள்ளது. அணைகளின் நீர்மட்டம் அதிகமாக உள்ளதையடுத்து குழித்துறை ஆற்றின் கரையோரப் பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அணைகள் நிரம்பி வருவதையடுத்து அணைகளை பொதுப்பணித் துறை அதிகாரிகள் 24 மணி நேரமும் கண்காணித்து வருகிறார்கள். அணையில் நீர் வரத்திற்கேற்ப அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

குமரி மாவட்டம் முழுவதும் விவசாயிகள் கன்னிப்பூ சாகுபடி செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பறக்கை, சுசீந்திரம், தெங்கம்புதூர், பூதப்பாண்டி, இறச்சகுளம், தாழக்குடி பகுதிகளில் இதுவரை 1,500 ஹெக்டேரில் சாகுபடி பணிகளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர்.

நிகழாண்டு மாவட்டத்தில் 6,500 ஹெக்டேரில் கன்னிப்பூ சாகுபடி மேற்கொள்ள வேளாண்மைத் துறை அதிகாரிகள் இலக்கு நிர்ணயித்துள்ளனர். அணையில் நீர்வரத்து அதிகமாக இருப்பதாலும், மேலும் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாலும் கன்னிப்பூ சாகுபடியில் இலக்கை எட்டமுடியும் என்று வேளாண்மைத் துறை அலுவலர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

**சம்பா நெல் சாகுபடிக்காக மேட்டூர் அணையை ஆகஸ்ட் கடைசி வாரத்தில் திறக்கலாம்:மூத்த வேளாண் வல்லுநர் பேரவை பரிந்துரைன**



தஞ்சாவூர் : சம்பா நெல் சாகுபடிக்காக மேட்டூர் அணையை ஆகஸ்ட் இறுதி வாரத்தில் திறக்கலாம் என தமிழக அரசுக்கு, தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவை பரிந்துரை செய்துள்ளது.

தஞ்சாவூரில் இந்தப் பேரவையின் தஞ்சைக் கிளை 11 ஆண்டுகளாக மேட்டூர் அணையின் நீர் வழங்கல் திட்டக் கருத்துருவைத் தயாரித்து, தமிழக அரசுக்கு

அனுப்பி வருகிறது. நிகழாண்டிலும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து எதிர்பார்ப்பு, சாகுபடி பரப்பு, நீர்த் தேவை ஆகியவை குறித்து ஆய்வு செய்து, தயாரிக்கப்பட்ட பரிந்துரை கையேட்டை புதன்கிழமை வெளியிட்டனர்.

பிறகு, பேரவையின் தஞ்சாவூர் கிளைத் தலைவர் பி.கலைவாணன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மேட்டூர் அணையில் நிகழாண்டு ஜூன் 1-ஆம் தேதி தொடக்க இருப்பாக 15 டி.எம்.சி. தண்ணீர் இருந்தது. சாகுபடி காலமான ஜூன் முதல் ஜனவரி மாதம் வரை காவிரி நதிநீர் பங்கீடு நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்புப்படி 182 டி.எம்.சி. தண்ணீரும், 50% நம்பகத்தன்மையின்படி 179 டி.எம்.சி. நீர் மட்டுமே கிடைக்கும் என நம்பப்படுகிறது.

மேட்டூர் அணை இயல்பாக திறக்க வேண்டிய ஜூன் மாதத்தில் திறக்கப்பட்டால் குறுவை, சம்பா, தாளடி சாகுபடிக்கு மொத்தம் 250 முதல் 265 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படும். ஆனால், குறுவை சாகுபடிக்கு ஜூலை மாதத்தில் நாற்றுவிட்டு சாகுபடி தொடங்கினால், நன்மையைவிட தீமைகளே அதிகம் ஏற்படும். எனவே, ஜூலை மாதத்தில் அணை திறப்பது சிறந்த செயல் அல்ல.

ஆகஸ்ட் முதல் வாரத்தில் அணை திறக்கப்பட்டால், ஜனவரி மாதம் வரை சாகுபடிக்கு சுமார் 225 டி.எம்.சி. தண்ணீர் தேவை. ஆகஸ்ட் இறுதி வாரத்தில் அணை திறக்கப்பட்டால் 200 டி.எம்.சி. நீரைக் கொண்டும், வடகிழக்குப் பருவமழை நீர் மூலமும் சம்பா நெல் சாகுபடியை சிரமமின்றி மேற்கொள்ள இயலும்.

எனவே, நிகழாண்டு பயிர் சாகுபடிக்காக ஆகஸ்ட் மாத இறுதியில் மேட்டூர் அணையைத் திறக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்படி அணை திறக்கப்பட்டால், பாசனப் பகுதியில் நிலத்தடி நீர் மூலம் குறுவை பருவத்தில் 1 லட்சம் ஹெக்டேரிலும், சம்பா பருவத்தில் 4.65 லட்சம் ஹெக்டேரிலும், தாளடி பருவத்தில் 80 ஆயிரம் ஹெக்டேரிலும் நெல் சாகுபடி எதிர்பார்க்கலாம். வாழை, கரும்பு போன்ற பிற பயிர்கள் 55 ஆயிரம் ஹெக்டேரில் எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பா பட்டத்தில் குறைந்தது 2 லட்சம் ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பு சாகுபடி முறை மேற்கொண்டால்தான், நீர் பற்றாக்குறை இன்றி சாகுபடி செய்ய முடியும்.

மேலும், காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பைச் செயல்படுத்த ஏதுவாக காவிரி மேலாண்மை வாரியத்தையும், காவிரி நதிநீர் ஒழுங்குமுறைக் குழுவையும் மத்திய அரசு அமைக்க உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அணை திறந்தவுடன் தண்ணீர் கடைமடை பகுதி வரை உடனடியாகச் சென்றடையும் விதமாக ஆறு, கால்வாய்களை

முன்னதாகவே தூர் வாரி செப்பனிடவும், ஏரிகளைச் சீர்செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தப் பரிந்துரையைத் தமிழக அரசுக்கு அனுப்பவுள்ளோம் என்றார் கலைவாணன்.

## ரூ. 6.18 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அவிநாசியில் புதன்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ரூ. 6.18 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் பருத்தி வரத்து அதிகரித்து 400 மூட்டைகள் வந்திருந்தன. இதில், ஆர்.சி.எச் ரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 5,000 முதல் ரூ. 5,600 வரையிலும், டி.சி.எச் ரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 6,000 முதல் ரூ. 6,400 வரையிலும், மட்ட ரகப் பருத்தி ரூ.1,600 முதல் ரூ. 2,000 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 6.18 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது. கடந்த வாரத்தை விட பருத்தி குவிண்டாலுக்கு ரூ. 300 அதிகரித்ததால் விவசாயிகள் மகழ்ச்சியடைந்தனர்.

இந்த ஏலத்தில், பென்னாகரம், கிணத்துக்கடவு, கோபி, நம்பியூர், அன்னூர், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி, புளியம்பட்டி, மேட்டூர், அன்னூர் ஆகிய பகுதிகளிலிருந்து 47 பருத்தி விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 7 பருத்தி வியாபாரிகளும் கலந்து கொண்டனர்.

## உடுமலையில் கொப்பரைக் கொள்முதல் மையம் திறப்பு

உடுமலை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் சார்பில் கொப்பரை கொள்முதல் மையம் திறப்பு விழா புதன்கிழமை நடைபெற்றது.

உடுமலை ஒழுங்கு முறை விற்பனைக் கூட வளாகத்தில் நடைபெற்ற விழாவில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திருப்பூர் மாவட்ட ஆட்சியர் ச.ஜெயந்தி கொப்பரை கொள்முதலை தொடங்கி வைத்தார். இதன் மூலம் அரவை கொப்பரை கிலோ ரூ. 59.50-க்கும், பந்துக் கொப்பரை கிலோ ரூ.62.40-க்கும் கொள்முதல் செய்யப்படும்.

இதுகுறித்து கூட்டுறவு சங்க அதிகாரிகள் கூறியது: தென்னை விவசாயிகளுக்கான அடையாள அட்டை அச்சடிக்கப்பட்டு அந்தந்த வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் அடையாள அட்டை தேவைப்படுவோர் வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்றனர்.

இந்நிகழ்ச்சியில், உடுமலை கோட்டாட்சியர் அ.சாதனைக்குறள், உடுமலை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவர் கே.ஆறுச்சாமி, அதிமுக நிர்வாகிகள் வழக்குரைஞர் கே.மனோகரன், ஆர்ஜி.ஜெகநாதன், கே.ஜி.சண்முகம், கூட்டுறவு சங்க மேலாண் இயக்குநர் சாகுல் ஹமீது, அக்ரோ தலைவர் சிவகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

அவிநாசியில்...

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் (ஏசிஎம்எஸ்) கொப்பரை கொள்முதல் மையம் புதன்கிழமை திறக்கப்பட்டது.

அவிநாசி-ஈரோடு சாலையில் உள்ள கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, ஏசிஎம்எஸ் தலைவர் மு.சுப்பிரமணியம் தலைமை வகித்தார். கூட்டுறவு மேலாண்மை இயக்குநர் மோசஸ் ரத்தினம் பிள்ளை, மேலாளர் சண்முகம், துணைத் தலைவர் ஜெயபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருப்பூர் கூட்டுறவுத் துறை சரக துணைப் பதிவாளர் ரா.பழனி கொப்பரை கொள்முதல் மையத்தை திறந்து வைத்தார். வேளாண்மைத் துறை அலுவலர்கள், தென்னை விவசாயிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதுகுறித்து ஏசிஎம்எஸ் தலைவர் மு.சுப்பிரமணி கூறியது:

தமிழக அரசு உத்தரவுப்படி, திறக்கப்பட்டுள்ள கொப்பரை கொள்முதல் மையம் பிரதி வாரம் திங்கள்கிழமை செயல்படும். இதில் விவசாயிகள், அரவை கொப்பரை கிலோ ரூ. 59.50-க்கும், பந்து கொப்பரை கிலோ ரூ. 62.40-க்கும் விற்று பயன் பெறலாம். இதற்கு விவசாயிகள் கிராம நிர்வாக அலுவலர், வேளாண்மைத் துறை அலுவலர் அணுகி உரிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

## கோவையில் பலத்த காற்று: மரக் கிளைகள் முறிந்தன

கோவை மாநகரில் புதன்கிழமை வீசிய பலத்த காற்றால் பல இடங்களில் மரக் கிளைகள் முறிந்து விழுந்தன.

கேரளத்தில் தென்மேற்கு பருவக் காற்று தொடங்கியுள்ள நிலையில் பரவலாக மழை பெய்து வருகிறது. கேரளத்தை ஒட்டியுள்ள கோவை மாவட்டத்திலும் அவ்வப்போது காற்றுடன் சாரல் மழை பெய்து வருகிறது. இந்நிலையில், புதன்கிழமை காலை முதலே மாநகரில் காற்றின் வேகம் அதிகமாக இருந்தது.

பிற்பகலில் சூறாவளி போன்று காற்று வீசியது. இதனால், மாநகரின் பல இடங்களில் காவல் துறை வைத்திருந்த இரும்பு சாலைத் தடுப்புகள், தனியார் நிறுவனங்களின் விளம்பரப் பதாகைகள் காற்றில் சாய்ந்தன. அதேபோல் மாநகரின் பல்வேறு இடங்களில் ஏராளமான மரக் கிளைகள் ஒடிந்து விழுந்தன.

இதனால், சில இடங்களில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதுகுறித்து தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் காலநிலை ஆராய்ச்சி மையத் தலைவர் எஸ்.பன்னீர்செல்வம் கூறியது:

கோவை மாவட்டத்தில் வழக்கமாக மணிக்கு 7 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசும். தென்மேற்கு பருவக் காற்று காலத்தில் இது மணிக்கு 12 கிலோ மீட்டராக அதிகரிக்கும். ஆனால் புதன்கிழமை அதிகபட்சமாக மணிக்கு 16 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசியது. வரும் நாள்களில் காற்றின் வேகம் மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

பருவக் காற்றின் வேகம் அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதால் வாழை விவசாயிகள் மரங்களுக்கு முட்டுக் கொடுக்க வேண்டும். மேலும், மரங்களின் அடியில் கால்நடைகளை கட்டி வைப்பதைத் தவிர்க்க வேண்டும். தென்னை மரங்களுக்குக் கீழே விவசாயிகள், தொழிலாளர்கள் அமருவதையும் தவிர்க்க வேண்டும் என்றார்.

## குழித்துறையில் கதம்பைதூள் தயாரிக்கும் பயிற்சி

குழித்துறையில் கிரீன் அக்ரி கிளப் சார்பில் விவசாயிகளுக்கு கதம்பைத் தூள் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சிக்கு அருள்தந்தை அமலதாஸ் தலைமை வகித்தார். டார்வின் வரவேற்றார். டேவிட் இயற்கை உரப் பற்றாக்குறையைப் போக்க கதம்பை தூள் தயாரிப்பது குறித்து பேசினார். கதம்பை தூள் கம்போஸ்ட் உரம் தயாரிக்கும் செய்முறை குறித்து வேளாண் அறிஞர் ராஜகுமார் பயிற்சி அளித்தார். இம் மாவட்டத்தில் மலிவாகவும், எளிதாகவும் கிடைக்கும் கதம்பைத்தூளை மக்கும் உரமாக மாற்றுவதினால் உர பற்றாக்குறையைப் போக்க முடியும். சுற்றுப்புற சுகாதாரத்தைப் பேணிகாக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த மரியபுஸ்பம், ஜோஸ்பின், மெற்றல்சாந்தி உள்ளிட்டோர் தலைமையில் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. ஒரு டன் கதம்பை தூளை மக்கும் உரமாக மாற்றுவதற்கு 5 கிலோ யூரியா, 2 லிட்டர் கோமியம், 5 பாக்கெட் காளான் விதை போதுமானது. 6 நாள்களில் கம்போஸ்ட் உரம் தயார் செய்யலாம் என பயிற்சியில் விளக்கப்பட்டது.

இப்பயிற்சியில் கலந்துகொண்டவர்களுக்கு பயிற்சி கையேடு வழங்கப்பட்டது. அமைப்பின் நிர்வாகி வில்சன் நன்றி கூறினார்.

தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

## தயிருக்கு மாற்றுப்பொருள்

தயிருக்கு மாற்றுப்பொருள் என்று சொல்வதை விட மருத்துவ குணம் மிக்க தயிர் என யோகர்ட் தயிரைச் சொல்லலாம். யோகர்ட் தயிர் தயாரிக்க ஸ்ட்ரெப்டோ காக்கஸ் தெர்மோபில்ஸ், லோக்டோபேசில்ஸ் பல்கேரிக்கஸ் என்ற நுண்ணுயிரிகள் சமவிகிதத்தில் கலக்கப்படுகின்றன. இந்த நுண்ணுயிரிகள் அபாயகரமான நுண்ணுயிரிகளை அழிக்கும் தன்மை கொண்டவை. இதனால் சாதாரண தயிரை விட யோகர்ட் தயிருக்கு நோய் எதிர்பாற்றல் அதிகமாக உள்ளது. ரத்தத்தில் கொழுப்புச் சத்து அளவு உயர்வதை யோகர்ட் தயிர்

தடுக்கிறது. கால்சியம், பாஸ்பரஸ் போன்ற தாதுக்களின் அளவும் யோகர்ட் தயிரில் அதிகமாக உள்ளது.

### கொப்பரை தேங்காய் கொள்முதல் மையம் திறப்பு

மொடக்குறிச்சி: மொடக்குறிச்சியில், கொப்பரை தேங்காய் கொள்முதல் மையம் திறப்பு விழா நடந்தது.விழாவில், கலெக்டர் பிரபாகர் பேசியதாவது: தென்னை விவசாயிகளின் நலன் கருதி, அரசு ஆதரவு திட்டம் என்ற திட்டத்தை வகுத்து, அரவை கொப்பரை தேங்காய் கிலோ, 59.50க்கும், பந்து கொப்பரை தேங்காய் கிலோ, 62.40 க்கும் அரசு கொள்முதல் செய்யப்படுகிறது. அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைகூடத்தில் வாரந்தோறும் செவ்வாய் கிழமை நாட்களில் காலை, 9 முதல் மாலை 4 மணி வரை கொள்முதல் செய்யப்படும். தென்னை விவசாயிகள் இந்த மையத்தை பயன்படுத்தி பலன் அடையலாம். இவ்வாறு அவர் பேசினார். ஈரோடு எம்.பி.,செல்வக்குமார சின்னையன், மொடக்குறிச்சி எம்.எல்.ஏ., சிவசுப்பிரமணி, முன்னாள் அமைச்சர் பி.சி.ராமசாமி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### பலாப்பழம் ரூ.300

திண்டுக்கல்: திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு பலாப்பழம் விற்பனைக்கு வர துவங்கியுள்ளது.
திண்டுக்கல் மாவட்டம் சிறுமலையில் அதிகளவில் பலாப்பழம் சாகுபடியாகிறது. இங்கிருந்து வெளி மாவட்டங்கள், மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. தற்போது பலாப்பழம் சீசன் துவங்க இருப்பதால், திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு பலாப்பழம் விற்பனைக்கு வர துவங்கியுள்ளது. பலாப்பழம் தரத்திற்கு ஏற்ப ரூ.100 முதல் ரூ.300 வரை விற்பனை செய்யப்படுகிறது.
வியாபாரி ஒருவர் கூறுகையில்,'சீசன் துவங்க உள்ளதால் வரத்து அதிகரித்துள்ளது. மேலும், வரத்து அதிகமானால் விலை குறைய வாய்ப்புள்ளது',என்றார்.

**கொப்பரை தேங்காய் கொள்முதல் துவக்கம்**

திண்டுக்கல்: திண்டுக்கல் அரசு கொப்பரை தேங்காய் கொள்முதல் மையத்தில் விவசாயிகளிடம் நேரடி கொள்முதல் நேற்று துவங்கியது.

இதற்கான விழாவில் வேளாண் இணை இயக்குநர் சம்பத்குமார், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குநர் மனோகரன் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட வருவாய் அலுவலர் (பொ)லதா, கூட்டுறவுத் துறை இணை பதிவாளர் பழனிவேலு, துணை பதிவாளர் திருப்பதி, கூட்டுறவு விற்பனை சங்கம் மோகன் முன்னிலை வகித்தனர்.

விழாவில் கொப்பரை தேங்காய்கள் எவ்வாறு கொள்முதல் செய்யப்படும், கொள்முதலுக்கு முன் விவசாயிகள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து விளக்கப்பட்டது.

கொள்முதல் செய்ததற்கான தொகை விவசாயிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்படும் என அதிகாரிகள் கூறினர். இதில் கூட்டுறவு சங்கத்தினர் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கொள்முதல் விலை அதிகரிப்பால் வெங்காய விவசாயிகள் மகிழ்ச்சி

கன்னிவாடி: வெங்காயம் கொள்முதல் விலை கிலோவுக்கு ரூ.30 வரை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் சேமித்து வைத்திருந்த வெங்காயத்தை விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

கன்னிவாடி பகுதியில் போதிய மழை இல்லாத சூழலில், தண்ணீர் பற்றாக்குறை, கொளுத்தும் வெயில் போன்றவற்றால் சாகுபடி பணிகள் பாதித்துள்ளன. வெங்காயம், பயறு வகை, கொத்தமல்லி, சூரியகாந்தி, எள், பருத்தி போன்றவற்றின் சாகுபடி பரப்பளவு வெகுவாக குறைந்து வருகிறது.

சில ஆண்டுகளாக மக்காச்சோள சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். சொற்ப பரப்பளவில் தக்காளி, வெங்காயம், கத்தரி போன்றவற்றின் சாகுபடி நடக்கிறது. பெரும்பான்மையான நேரங்களில், போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் தவிப்பிற்குள்ளாவது தொடர்கிறது.

கோனுார், கசவனம்பட்டி, மாங்கரை, அனுமந்தராயன்கோட்டை, வட்டப்பாறை, கரிசல்பட்டி பகுதிகளில் 4 மாதங்களுக்கு முன் பெரும்பாலான விவசாயிகள் வெங்காயம் பயிரிட்டிருந்தனர். இரு மாதங்களுக்கு முன், அவை பலனளிக்கத் துவங்கியபோது போதிய விலை கிடைக்கவில்லை.

இதையடுத்து அவற்றை வீடுகளிலேயே சேமித்து வைத்தனர். தற்போது மார்க்கெட்டில் வெங்காய கொள்முதல் விலை அதிகரிக்கத் துவங்கியுள்ளது. எனவே அவற்றை தரம் பிரித்து மார்க்கெட்டிற்கு அனுப்பும் பணியில்

ஈடுபட்டுள்ளனர்.
கோனுார் விவசாயி குமார் கூறியதாவது: இரண்டு மாதங்களுக்கு முன் கிலோ ரூ.8 முதல் 12 வரை கொள்முதலானது. விதைப்பு, பராமரிப்பு செலவுக்கு கட்டுபடியாகாத நிலை இருந்தது. தற்போது திண்டுக்கல் மார்க்கெட்டில் கிலோ ரூ.30 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே சேமித்த வெங்காயத்தை தரம் பிரித்து அனுப்புகிறோம், என்றார்.

## தினமும் உயருது தக்காளி விலை

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் வரத்து குறைவால் தக்காளி கிலோ ரூ.80 க்கு விற்பனையானது.

திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம், நிலக்கோட்டை, வேடசந்துார், ரெட்டியார்சத்திரம், வடமதுரை, தொப்பம்பட்டி பகுதிகளில் 1898 எக்டேரில் தக்காளி சாகுபடியாகிறது.
திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு தினமும் 300 முதல் 400 கிலோ வரை விற்பனைக்கு வரும். தற்போது உள்ளூர் வரத்து இல்லாததால் ஆந்திராவில் இருந்து தினமும் 500 முதல் 1000 கிலோ வரை விற்பனைக்கு வருகிறது.
இதனால் தக்காளி விலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. சென்ற மாதம் தக்காளி வரத்து அதிகம் இருந்த போது ஒரு கிலோ ரூ.18 முதல் ரூ.25 வரை விற்றது.
உள்ளூர் வரத்து குறைந்ததால் கிலோ ரூ.35 முதல் ரூ.45 வரை விற்றது. தற்போது வெளிமாநிலங்களில் இருந்து வருவது குறைந்துவிட்டதால் விலை மேலும் அதிகரித்துள்ளது.
நேற்று முன்தினம் ஒரு கிலோ தக்காளி ரூ.64 க்கு விற்றது. நேற்று ரூ.16 அதிகரித்து கிலோ ரூ.80 க்கு விற்பனையானது. வியாபாரி ஒருவர் கூறுகையில்,'விலை மேலும் அதிகரிக்கவே வாய்ப்பு உள்ளது',என்றார்.

## காய்கறிகளின் விலை உயர்வுக்கு காரணமென்ன? விவசாயிகளிடம் விழிப்புணர்வு இல்லையா

திண்டுக்கல்: திண்டுக்கல் உட்பட பல மாவட்டங்களிலும் காய்கறிகள் விலை அவ்வப்போது அதிகரிக்கிறது. சாகுபடி காலங்களில் சேமித்து வைக்காததே காரணமென வேளாண் துறையினர் கூறுகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டத்தை பொறுத்தவரை உருளைக்கிழங்கு 2216 எக்டேர், வெங்காயம் 2580, முருங்கைக்காய் 2062, காலிபிளவர் 460, பீன்ஸ் 554,

கத்தரிக்காய் 668, தக்காளி 1890, கேரட் 730, பீட்ரூட் 148 எக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது.

இங்கிருந்து மதுரை, திருச்சி, நெல்லை உள்ளிட்ட மாவட்டங்களுக்கும், கேரளா, ஆந்திரா ஆகிய மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. சாகுபடி காலங்களில் காய்கறிகள் விலை குறைந்தும், மற்ற காலங்களில் விலை அதிகரித்து விடுகிறது. 'சீசன்' நேரத்தில் தாராளமாக கிடைப்பதால், விரைந்து அழுகும் தன்மையுள்ள காய்கறிகள், பழங்கள், பூக்களை விற்றே ஆகவேண்டிய நிலையில் விலை மலிந்து விடுகிறது.

எனவே அவற்றை சேமித்து வைத்து 'ஆப் சீசன்' காலங்களில் விற்பனை செய்தால் ஒரே சீரான விலையை தக்க வைக்க முடியும். மாநில அளவில் இதுதான் பிரச்னையாக உள்ளது.

சேமிப்பு கிடங்கிகள்: சாகுபடி செய்யும் காய்கறிகள், பழங்கள், தானியங்களை சேமித்து வைக்க அரசு தரப்பில் திண்டுக்கல், பழநி, வத்தலகுண்டு, நத்தம், ஒட்டன்சத்திரம், கோபா
ல்பட்டி ஆகிய பகுதிகளில் குளிர் மற்றும் குளிரற்ற சேமிப்பு குடோன்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் ஒவ்வொரு குடோனிலும் 25 டன் அளவிற்கு, மாவட்டம் முழுவதும் மொத்தம் 6,900 மெட்ரிக்
டன் வரை சேமித்து வைக்க முடியும்.
குளிர் மற்றும் குளிரற்ற சேமிப்பு கிடங்கிகளில் சேமித்து வைக்க கட்டணம் உண்டு. இங்கு சேமித்து வைப்பவர்களில் 70 சதவீதம் பேர் வியாபாரிகளே. 30 சதவீதம்தான் விவசாயிகள்.
ஏனோ அவர்களிடம் சேமித்து வைக்க ஆர்வம் காட்டுவதில்லை. இதனால் காய்கறிகளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.
ஆர்வமில்லா விவசாயிகள்: பொதுவாகவே விவசாயிகள் சாகுபடி செய்த காய்கறிகள், பழங்களை அன்றைய தினமே கிடைத்த விலைக்கு விற்றால் போதும் என்ற மனநிலையில் உள்ளனர். இதனால் குடோன்கள் குறித்து அக்கறை காட்டுவதில்லை.

விவசாயிகள் காய்கறி, பழங்களை பாதிக்கு பாதி விற்பனை செய்யவோ, வெளியூர்களுக்கு ஏற்றுமதியோ செய்யலாம். மீதியை அரசு சேமிப்பு கிடங்கில் சேமித்து வைத்து தேவையான போது விற்பனை செய்யலாம். இதனால் விவசாயிகளும் பொதுமக்களும் பயன்பெற முடியும். ஆனால், சேமித்து வைக்கும் தன்மை இல்லாததால், தேவையான காலங்களில் பிற மாவட்டங்கள், மாநிலங்களை நாட வேண்டியது உள்ளது.

வேளாண் விற்பனைக்குழு செயலாளர் செய்யது இப்ராஹிம் கூறுகையில், “தனியார் குடோன்களில் அதிக கட்டணம் கொடுத்து சேமிப்பதை தடுக்க,

விவசாயிகளுக்கென அரசு தரப்பிலும் குடோன்கள் அமைக்கப்பட்டுள்ளன.
இங்கு சேமிக்க நாளொன்றுக்கு தானியங்கள் எனில் 100 கிலோவுக்கு வெறும் 10 காசுகள்தான் கட்டணம். காய்கறிகள் எனில் 22 கிலோவுக்கு ரூ.16 என்ற வகையில், காய்கறிகளைப் பொறுத்து கட்டணம் மாறும்.

அதுதவிர காய்கறிகள், பழங்களை சேமிக்க 120 நாட்களுக்கு பொருள் ஈட்டு கடன்வசதியும் வழங்கப்படுகிறது.
சேமிக்க வாடகை எதுவும் வழங்க தேவையில்லை. கடனுக்கு 5 சதவீத வட்டி செலுத்தினால் போதும். இதுபற்றிய விழிப்புணர்வு விவசாயிகளிடம் இல்லை" என்றார்.

## அதிக விலைக்கு உரம் விற்றால் விற்பனையாளர் உரிமம் ரத்து வேளாண் அதிகாரி தகவல்

திண்டுக்கல்: அதிக விலைக்கு உரம் விற்றால் விற்பனையாளர் உரிமம் உடனே ரத்து செய்யப்படும் என வேளாண் இணை இயக்குநர் சம்பத்குமார் தெரிவித்தார்.

பயிர் வளர்ச்சிக்கு அவசியமான உரங்களை விற்பனை செய்வோர், விவசாயிகளுக்கு விற்பனை ரசீதை கண்டிப்பாக வழங்க வேண்டும். அதில் விவசாயி பெயர், முகவரி, உரத்தின் பெயர், அளவு, விலை குறிப்பிட்டிருக்க வேண்டும். மேலும் விவசாயி, விற்பனையாளரின் கையொப்பமும் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

தனியார் உர விற்பனை நிலையங்களில், உரங்களின் இருப்பு, விலைப் பட்டியல் அடங்கிய தகவல் பலகை கண்டிப்பாக இடம் பெற வேண்டும். கலப்படம் இல்லாத உரங்களையே விற்க வேண்டும்.

இணை இயக்குநர் சம்பத்குமார் கூறுகையில், "கலப்படமில்லா உரம் விற்பனையை கண்காணிக்க வேளாண் அலுவலர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. முறைகேடு தெரியவந்தால், விற்பனை உரிமம் கட்டாயமாக ரத்து செய்யப்படும்", என்றார்.

## சோத்துப்பாறை அணை தூர்வார சர்வே பணி துவக்கம்

பொதுப்பணித்துறை அதிகாரிகள் இயந்திர படகில் இரண்டு மணி நேரம் பயணித்து அளவுகள் கணக்கிட்டனர்.
பெரியகுளம் அருகே வராகநதியின் குறுக்கே சோத்துப்பாறை அணை கட்டுமானப்பணி 1989ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பணிகள் முடிந்து 2001ம் ஆண்டு முதன்முறையாக விவசாயிகளுக்கு பாசனத்திற்காகவும், பெரியகுளம் பகுதி மக்கள் குடிநீருக்காகவும் திறக்கப்பட்டது.21 முறை நிரம்பி மறுகால் பாய்ந்துள்ளது. அணை நீர் வற்றிய நிலையில் துார் வாரவேண்டும் என விவசாயிகள் ஒருங்கிணைப்பு சங்கத்தினர் பொதுப்பணித்துறையினரிடம் பல முறை கோரிக்கை வைத்திருந்தனர்.
சர்வே
இந்நிலையில் மதுரை பொதுப்பணித்துறை (நீர்பிடிப்பு பராமரிப்பு வாரியகோட்டம்) சோத்துப்பாறை அணையை துார்வார சர்வே செய்யும் பணியினை நேற்று துவக்கினர்.

உதவி செயற்பொறியாளர்கள் சுமதி ரோஸரினா, மல்லிகா மற்றும் பேரிடர் மீட்பு குழுவினருடன் இயந்திரப் படகில் இரண்டு மணி நேரம் பயணித்தனர். டிரைவர் சுரேஷ்பாபு ஓட்டினார். அளவீடுகள் பதித்த நீளமான கம்பியில் மணல் தேங்கியுள்ள அளவுகள் கணக்கிடப்பட்டது.

பொதுப்பணித்துறையினர் கூறியதாவது, ' ஆண்டுக்கு இரு அணைகள் துார்வார்வதற்கு சர்வே செய்யப்படும். இந்தாண்டு சோத்துப்பாறை அணை, விருதுநகர் மாவட்டம் குல்லுார் சந்தை அணையில் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. சோத்துப்பாறை அணையில் நான்கு முதல் ஆறுமாதம் சர்வே செய்யப்படும். மழைபெய்யும் போது வண்டல் மண் அளவீடுகள், அணையின் நீளம், அகலம், உயரம் உள்ளிட்ட பகுதிகள் கணக்கிடப்படும். அதன் பிறகு துார்வார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், என்றனர்.

## தேங்காய் கொள்முதல்: கலெக்டர் துவக்கி வைப்பு

வாழப்பாடி: சேலம் மாவட்டத்தில், அதிக அளவில் தேங்காய் உற்பத்தி செய்யும் வாழப்பாடி பகுதி விவசாயிகளிடம், நேரடியாக கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்திட, நடவடிக்கை எடுக்க வேண்டுமென, பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். அதையடுத்து, வாழப்பாடியில் இயங்கும், மாவட்ட வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க கிளையில், கொப்பரை

தேங்காய் கொள்முதல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. வாழப்பாடியில், நேற்று நடந்த விழாவில், விவசாயிகளிடம் நேரடியாக கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்யும் திட்டத்தை, சேலம் கலெக்டர் சம்பத் துவக்கி வைத்தார்.

ராசிபுரத்தில் கொப்பரை தேங்காய் கொள்முதல் துவக்கம்

கொடிவகை காய்கறிகள் மேலாண் பயிற்சி முகாம்

மோகனூர்: 'வரும், 21ம் தேதி, கொடிவகை காய்கறிகள் சாகுபடியில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண் என்ற தலைப்பில், ஒரு நாள் பயிற்சி முகாம் நடக்கிறது' என, வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் அகிலா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 21ம் தேதி, காலை, 9 மணிக்கு, 'கொடிவகை காய்கறிகள் சாகுபடியில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்' என்ற தலைப்பில், ஒருநாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது. பயிற்சியில், கொடிவகை காய்கறிகள் சாகுபடியில், மண் மற்றும் பாசன நீர் ஆய்வின் முக்கியத்துவம், ஒருங்கிணைந்த உர மேலாண், உரங்கள் அளிக்கும் முறைகள் குறித்து விளக்கப்படுகிறது. விருப்பம் உள்ளவர்கள், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும், வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது, 04286 - 266 345, 266 650 என்ற தொலைபேசி மூலமாகவோ தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

# எந்த கோழியும் 65 கிராம் முட்டை போடுவதில்லை நாமக்கல் பண்ணையாளர்கள் விளக்கம்



நாமக்கல் : நாமக்கல் பண்ணைகளில் 65 கிராம் அளவிலான முட்டை ஏதும் உற்பத்தியாவதில்லை. வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படும் முட்டைக்கு நாங்கள் எந்த குறியீடும் போடுவதில்லை என்று நாமக்கல் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். நாமக்கல் மண்டலத்தில் 800க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. சுமார் 5 கோடி முட்டையின கோழிகள் இங்குள்ள பண்ணைகளில் வளர்க்கப்படுகிறது. சந்தை நிலவரத்துக்கு ஏற்ப பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் முட்டைக்கு அவ்வப்போது தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு விலை நிர்ணயம் செய்கிறது. இதில் முட்டை எடைக்கு ஏற்ப பண்ணயைாளர்களிடம் வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். கொள்முதல் விலை மற்றும் போக்குவரத்து செலவீன அடிப்படையில் ஒவ்வொரு பகுதிக்கும் தனி விலையை ஒருங்கிணைப்பு குழு நிர்ணயித்துள்ளது. ஆனால் இதை வியாபாரிகள் பின்பற்றுவதில்லை. நாமக்கல் கோழிப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் முட்டையில் சில பண்ணைகளில் பெரிய சைஸ் முட்டைக்கு தனி குறியீடு போட்டு வியாபாரிகளிடம் பண்ணையாளர்கள் விற்பனை செய்வதாக கூறப்படுகிறது. சேலம் மாவட்ட முட்டை விற்பனையாளர்கள் நலச்சங்க செயலாளர்

சுந்தர்ராஜன் கூறுகையில், ‘‘மொத்த முட்டை உற்பத்தியில் 10 சதவீதம் 65 கிராம் எடை கொண்ட முட்டைகள் விற்பனைக்கு வருகிறது. பெரிய சைஸ் முட்டை எப்போதும் 25 காசு அதிகமாக இருக்கும். சில நேரங்களில் வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் சிறிய, நடுத்தர முட்டைகளை, பெரிய சைஸ் முட்டை என கூறி, விற்பனை செய்கின்றனர். இதனால் வாடிக்கையாளர்களுக்கு ஒரு முட்டைக்கு 25 காசு முதல் 50 காசு வரை நஷ்டம் ஏற்படுகிறது. இந்த மோசடியை தடுக்கும் வகையில், பெரிய சைஸ் முட்டையின் ஓட்டில் எஸ்.பி., (ஸ்பெஷல் முட்டை) என்ற அடையாள குறியீடு போட்டு, சில பண்ணையாளர்கள் விற்பனைக்கு அனுப்புகின்றனர்’’ என தெரிவித்தார். தற்போது இந்த விவகாரத்தில் புதிய சர்ச்சை ஏற்பட்டுள்ளது. பண்ணைகளில் இதுபோன்ற குறீயீடு ஏதும் போடுவதில்லை என முட்டைக்கோழி பண்ணையாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது இது குறித்து தமிழ்நாடு முட்டைக்கோழி பண்ணையாளர்கள் சம்மேளன துணைத்தலைவர் வாங்கிலி சுப்பிரமணியம் கூறியதாவது: எந்த கோழியும் 65 கிராம் அளவுமுட்டை போடுவதில்லை. தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு நிர்ணயம் செய்யும் விலையில் இருந்து பண்ணையார்கள் விலையை குறைத்து கொடுக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. நாமக்கல்லில் இருந்து விற்பனைக்கு அனுப்பப்படும் எந்த முட்டையிலும் குறியீடு போடுவதில்லை. வியாபாரிகள் பண்ணைகளில் முட்டையை வாங்கும்போது பெரிய முட்டைகளை பார்த்து தான் வாங்கி செல்கின்றனர். 20வது வாரத்தில் கோழிகள் இடும் முட்டைகள் பண்ணைகளில் அன்றே சேகரிக்கப்பட்டு தனி பெட்டியில் அடுக்கி வைக்கப்படுகிறது. அது சைஸ் சிறியதாக இருக்கும். அந்த முட்டைகளை வியாபாரிகள் என்.இ.சி.சி விலையில் இருந்து குறைத்து தான் வாங்கி செல்கின்றனர். பெரிய சைஸ் முட்டை வரும்போது அன்றைய மார்க்கெட் நிலவரத்தை பொறுத்து தான் விற்பனை செய்து வருகிறோம். முட்டை விற்பனையில் தனி குறியீட்டை யாரும் பயன்படுத்துவதில்லை. அதற்கு அவசியமும் இல்லை. ஒரு கோழி 20வது வாரத்தில் போடும் முட்டைக்கும் 52வது வாரத்தில் போடும் முட்டைக்கும் அதிக நாட்கள் இடைவெளி உள்ளது. அவ்வளவு நாட்கள் சிறிய சைஸ் முட்டைகளை வைத்திருந்து பெரிய முட்டையுடன் சேர்க்க முடியாது. இவ்வாறு வாங்கிலி சுப்பிரமணியம் தெரிவித்தார்.அதிகபட்ச எடை 58 கிராம் தான்பண்ணைகளில் விடப்படும் கோழிக்குஞ்சுகள் 20வது வாரத்தில் முட்டை போட தொடங்குகின்றன. 52 வாரம் வரை கோழிகள் முட்டையிடும். அதன் பின் கோழிகள் கறிக்காக பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. 20வது வாரத்தில் கோழியிடும் முட்டை 40 கிராம் என்ற அளவில் இருக்கும். ஒவ்வொரு வாரமும் இந்த முட்டையின் எடை அதிகரிக்கும். 52வது வாரத்தில் கோழிகள் இடும் முட்டைகள் அதிகபட்சம் 58 கிராம் என்ற அளவில் தான் இருக்கும். ஒவ்வொரு

கோழியும் தனது ஆயுட்காலத்தில் 8 வித சைஸில் முட்டையிடுகின்றன. இந்த முட்டைகளை பண்ணையாளர்கள் புல்லட் (சிறிய முட்டைகள்), எக்ஸ்போர்ட் சைஸ், மீடியம், பெரியசைஸ் என 4 வகையாக பிரிக்கின்றனர். தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு வாரம்தோறும் 3 முறை முட்டைக்கு விலை நிர்ணயம் செய்து வருகிறது. அப்படி விலை நிர்ணயம் செய்யும்போது அனைத்து முட்டைக்கும் பொதுவான விலை தான் நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனால், வியாபாரிகள் பண்ணையாளர்களிடம் சிறிய முட்டைக்கு தனியாக விலை பேசி வாங்கி செல்கின்றனர். அவர்கள் கடைகளில் விற்பனை செய்யும்போது பெரிய முட்டையுடன் சிறிய முட்டையும் கலந்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்கின்றனர் என பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## 36 ஆண்டுகளுக்கு பின்னர் துளிர் விடும் கல்செக்கு எண்ணெய் தொழில்



நெல்லை : உணவுப் பழக்க விழிப்புணர்வு காரணமாக இயற்கை உணவிற்கு திரும்பும் ஆர்வலர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் நெல்லையில் 36 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் மாடு பூட்டி செக்கு மூலம் இயற்கையான முறையில் எண்ணெய் தயாரிக்கும் தொழில் துளிர்விடத் துவங்கியுள்ளது. 1980ம் ஆண்டிற்கு முந்தைய காலங்களில் நம் முன்னோர் கடைப்பிடித்த பல நல்ல பழக்கவழக்கங்கள் இன்றைய இளம் தலைமுறையினரால் மறக்கப்பட்டு வருகிறது. விளையாட்டு, உணவு, உடை என எல்லாவற்றிலும் கடந்த 30 ஆண்டுகளில் பெரும் மாற்றம் நிகழ்ந்து விட்டது. ஆட்டுக்கல், அம்மி, உரல் போன்றவை புறக்கணிக்கப்பட்டு அனைத்து உணவு தயாரிப்பு முறைகளும் உடல் உழைப்பை அதிகம் தரத்தேவையற்ற இயந்திர மயத்திற்கு மாறிவிட்டது. உணவு தயாரிப்பதற்கான உழைப்பு

குறைந்து, ருசிப்பது அதிகரித்ததால் உடல் பருமன் உள்ளிட்ட பல்வேறு பிரச்னை மற்றும் நோய்கள் பாலர் பருவத்தில் இருந்தே தொடங்கி விட்டது.30 ஆண்டுகால இயந்திர மய வாழ்க்கை சலிப்பையும் நோய்களையும் தருவதால் பலர் மீண்டும் நம் முன்னோர் கடைப்பிடித்த வழிமுறைக்கு மாறி வருகின்றனர்.

குறிப்பாக மண்பானை சமையல், நவதானிய உணவுகள், இயற்கை பானங்களை அருந்துவது போன்ற ஆர்வமும் தற்போது வரவேற்கத்தக்க அளவில் கூடியுள்ளது. இந்த வகையில் இயற்கையான முறையில் கல் செக்கில் மாடு பூட்டி எண்ணெய் பிழிந்து எடுப்பது 1980க்குப் பின்னர் மறைந்து விட்டது. நெல்லை பேட்டையில் 35 ஆண்டுகளுக்கு முன்னர் 60க்கும் மேற்பட்ட கல் செக்குகள் மாடு பூட்டி இயங்கி வந்தன. அந்த பகுதியே செக்கடி என்றழைக்கப்பட்டது. இங்கிருந்து இலங்கைக்கும் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டது. இயற்கையான முறையில் தயாரிக்கப்படும் செக்கு எண்ணெய்யில் குளிர்ச்சி அதிகம் இருக்கும் என்பதால் இதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. ஆனால் நாளடைவில் இயந்திரமயத்தில் சிக்கியதாலும், சூரியகாந்தி எண்ணெய், பாமாயில் போன்ற இறக்குமதி எண்ணெய்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததாலும் இத்தொழில் நலிவடைந்து காணாமல் போய் விட்டது. இதனால் மாடு பூட்டி செக்கு ஓட்டியவர்கள் வேறு தொழிலுக்கு சென்று விட்டனர். இந்நிலையில் இயற்கையாக செக்கில் ஆட்டி எடுக்கப்படும் எண்ணெய்க்கு மக்களிடம் திடீர் மவுசு ஏற்பட்டதையடுத்து பேட்டையை அடுத்து சுத்தமல்லி பாரதியார் நகரில் மீண்டும் கல் செக்கு மூலம் மாடு பூட்டி எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. இதனை நடத்தும் சீனிவாசன் கூறியதாவது: எனது தாத்தா மற்றும் தந்தை காலத்தில் இந்த தொழில் பிரபலமாக இருந்தது. நெல்லை பேட்டை பகுதி எண்ணெய் வாணிபத்தில் அண்டை நாடுகளிலும் புகழ்ெபற்றிருந்தது. நாளடைவில் இயந்திரம் மூலம் எண்ணெய் தயாரிப்பு தொழில் பிரபலமடைந்ததால் கல்செக்கு தொழில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நலிவடைந்து அழிந்து விட்டது. மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதால் இப்போது மீண்டும் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளோம். இது ஒரு குடிசைத்தொழில் என்பதால் இதனை பலரும் நடத்திட அரசு மானிய கடன் வழங்கி ஊக்குவிக்க வேண்டும். பனங்கருப்பட்டி, தரமான எள் உபயோகித்து எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. நல்லெண்ணெய் மட்டுமின்றி கடலெண்ணெய், தேங்காய் எண்ணெயும் இயற்கையான முறையில் செக்கில் ஆட்டி எடுக்கப்படுகிறது.இயற்கையான முறையில் எடுக்கப்படும் இந்த எண்ணெய் ஒரு வருடம் கூட கெடாமல் வாசனையுடன் இருக்கும். உடலுக்கு குளிர்ச்சியானதும் கூட. எண்ணெய் மட்டுமின்றி 35 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த அனைத்து உணவு பழக்க வழக்கமும், அத்தனை தயாரிப்பு முறைகளும் மீண்டும் வரவேண்டும் என்பது எனது விருப்பமாக உள்ளது. எனக்கு உதவியாக 85 வயதான எனது பெரியப்பா முத்தையா உள்ளார். அவர்

சிறு வயது முதல் கல் செக்கில் பாரத்திற்காக அமர்ந்து தொழில் கற்றவர். கல் செக்கில் இருந்து கிடைக்கும் எள் எண்ணெய் புண்ணாக்கும் உடல் நலத்திற்கு மிகவும் உகந்தது. இவ்வாறு அவர் கூறினார். மாடு பூட்டி எண்ணெய் தயாரிக்கும் முறை இன்றைய தலைமுறையினருக்கு தெரியாததாகும். இதனால் இதனை பார்க்க காலையிலேயே பலர் இந்தப் பகுதிக்கு வரத் தொடங்கியுள்ளனர்.

## நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் மீன் வளர்ப்பு, காய்கறி சாகுபடி பயிற்சி பங்கேற்க அதிகாரி அழைப்பு

நாமக்கல் : நாமக்கல் அரசு கால்நடை மருத்துவக்கல்லூரி வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்தில் கொடுவா மீன் வளர்ப்பு மற்றும் கொடிவகை காய்கறிகள் சாகுபடியில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி முகாமிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் அகிலா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நாமக்கல் கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 20ம் தேதி (திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு கொடுவா மீன் வளர்ப்பு என்ற தலைப்பில் ஒருநாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது. இப்பயிற்சியில், கொடுவா மீன்களின் வகைகள், உணவு பழக்கம், இனப்பெருக்கம், தொட்டி மற்றும் வளர்ப்புக் குளங்களில் பராமரிப்பு, நீர்த்தர மேலாண் மற்றும் வளர்ப்பு பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து தொழில்நுட்பங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதேபோல், மறுநாள் (21ம் தேதி) காலை 9 மணிக்கு, ‘கொடிவகை காய்கறிகள் சாகுபடியில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை’ என்ற தலைப்பில் ஒருநாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது. இப்பயிற்சியில், கொடிவகை காய்கறிகள் சாகுபடியில், மண் மற்றும் பாசன நீர் ஆய்வின் முக்கியத்துவம், ஒருங்கிணைந்த உர மேலாண்மை, உரங்கள் அளிக்கும் முறைகள் குறித்து விளக்கம் அளிக்கப்படுகிறது. எனவே முகாம்களில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வம் உள்ளவர்கள் பங்கேற்கலாம். விருப்பம் உள்ளவர்கள், நாமக்கல் கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது 04286 266345, 266650 என்ற தொலைபேசி மூலமாகவோ தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**புதன்சந்தை**

ே◌ந்தமங்கலம் : நாமக்கல் மாவட்டம், புதன்சந்தை தமிழக அளவில் பிரசித்தி பெற்ற பெரிய சந்தையாகும். இங்கு, செவ்வாய்க்கிழமை மாட்டுச்சந்தையும், புதன்கிழமை ஆட்டுச்சந்தையும் கூடுகிறது. சுற்றுப்புற பகுதியில் இருந்து ஏராளமான ஆடுகள், குட்டிகள், கிடா விற்பனைக்கு வரும். இதனை வாங்க நாமக்கல், சேந்தமங்கலம், எருமப்பட்டி, பவித்திரம், புதுச்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்தும், அண்டைய மாவட்டங்களான ஈரோடு, சேலம், திருச்சி, கரூர் உள்ளிட்ட இடங்களிலிருந்தும் ஏராளமான வியாபாரிகள் வருகின்றனர். நேற்று கூடிய சந்தையில் கடந்த வாரத்தை விட ஆடுகளின் விலை சற்று அதிகரித்தது. 10 கிலோ எடை கொண்ட இறைச்சி ஆடு ரூ.3,300க்கும், வளர்ப்பு ஆடுகள் ரூ.3,500க்கும் விற்பனையானது. பிறந்து ஒரு மாதமே ஆன பெண்குட்டி ரூ.600க்கும், கிடா குட்டி ரூ.700க்கும் விற்பனையானது. கடந்த வாரத்தை காட்டிலும் இறைச்சி ஆடு ஒன்றுக்கு ரூ.200 வீதம் அதிகரித்துள்ளது.

**பலாப்பழம் விற்பனை ஜோர்**

போச்சம்பள்ளி : போச்சம்பள்ளிக்கு பலாப்பழம் வரத்து அதிகரித்துள்ளது. தமிழகத்தில் மலைப்பகுதியில் விளையும் பலாவை லாரிகளில் மொத்தமாக கொண்டு வந்து மண்டிகளில் பாதுகாத்து விற்பனை செய்து வருகின்றனர். அளவிற்கேற்ப ஒரு பழம் ரூ.40 முதல் ரூ.150 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. இதனை சில்லரையில் வாங்கிச்செல்லும் வியாபாரிகள் சாலையோரம் குவித்து வைத்து கூவி கூவி விற்பனை செய்கின்றனர்.மேலும், பலாப்பழங்களை பிளந்து சுளைகளை தனியாக எடுத்து தள்ளுவண்டி மற்றும் சாலையோர கடைகளில் விற்பனை செய்து வருகின்றனர். பக்குவமாக சுளையை எடுத்து அதனை விற்பனை செய்வதில் பெரும் சிரமம் இருந்தாலும் நல்ல லாபம் கிடைத்து வருவதால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**போச்சம்பள்ளியில் விளைச்சல் அதிகரிப்பால் செடியில் அழுகும் கத்தரிக்காய்**

போச்சம்பள்ளி : போச்சம்பள்ளியில், விளைச்சல் அதிகரிப்பால் செடியிலேயே கத்தரி அழுகி வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.போச்சம்பள்ளி பகுதிகளில் கத்திரி, தக்காளி, பாவாக்காய், வெண்டை, முள்ளங்கி, உள்ளிட்ட காய்கறிகளை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். சுமார் 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் காய்கறிகள் பயிரிடப்பட்டு உள்ளது. தற்போது,

போச்சம்பள்ளி முழுவதும் கத்தரி விளைச்சல் அதிகரித்துள்ளது. சாகுபடிக்கு பின், காரிமங்கலம், ஊத்தங்கரை, அறந்தாங்கி, சேலம் உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைத்து விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். கடந்த வாரம் ஒரு கிலோ கத்தரி காய் ரூ.20 முதல் 25க்கு விற்பனையாது. ஆனால் இந்த வாரம் விளைச்சல் அதிகரித்து ஒரு கிலோ ரூ.4க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு வாரத்தில் ரூ.16 குறைந்துள்ளது விவசாயிகளை கவலையடைய செய்துள்ளது. இது குறித்து விவசாயிகள் கூறுகை யில், போச்சம்பள்ளி சுற்றுவட்டாரத்தில் கத்தரி காய் விளைச்சல் அதிகரிப்பால், விலை சரிந்துள்ளது. தற்போது ஒரு கிலோ ரூ.4க்கு விற்பதால், அறுப்பு கூலி கூட கிடைக்காமல் உள்ளது. இதனால் கத்தரி காய்களை பறிக்காமல் செடியிலேயே விட்டு விட்டதால் அவை செடியிலேயே அழுகி வருகிறது. இதன் காரணமாக வருவாய் இழப்பு ஏற்பட்டு நாங்கள் கவலை அடைந்துள்ளோம் என்றனர்.

## அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கொப்பரை தேங்காய் கொள்முதல் தொடக்கம்

ஈரோடு, : ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தில் அரசு ஆதரவு விலை திட்டத்தின்கீழ் கொப்பரை தேங்காய் நேரடி கொள்முதல் நிலையத்தில் கொப்பரை தேங்காய் கொள்முதல் தொடக்க விழா நேற்று நடந்தது. நிகழ்ச்சிக்கு கலெக்டர் பிரபாகர் தலைமை தாங்கி கொள்முதலை தொடங்கி வைத்து பேசுகையில், கொப்பரை தேங்காய் வெளிச்சந்தையில் 50 ரூபாய்க்கு கீழ் உள்ளதால் தென்னை விவசாயிகளின் நலன் கருதி இந்த ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தென்னை விவசாயிகளிடமிருந்து நேரடியாக அரவை கொப்பரை கிலோவிற்கு ரூ.59.40க்கும், பந்து கொப்பரை தேங்காய் கிலோவிற்கு ரூ.69.40க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது. தமிழக முதல்வரின் அரசு ஆதரவு விலை திட்டத்தின்கீழ் கொப்பரை தேங்காய் கொள்முதல் பணியை தேசிய வேளாண் விற்பனை இணையமும், பிரதம முகவராக தமிழ்நாடு கூட்டுறவு இணையமும் மற்றும் பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் தென்னை சாகுபடி செய்து விவசாயிகளிடமிருந்து தரமான கொப்பரை தேங்காய்களை இந்த விற்பனை கூட வளாகத்தில் பிரதிவாரம் செவ்வாய்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை விற்பனை செய்யப்படும். மேலும் இந்த விற்பனை கூடத்தில் கொப்பரை தேங்காயின் தரம் நிர்ணயம் செய்யப்பட்டு பின்னர் கொள்முதல் செய்ய எடுத்துக் கொள்ளப்படுகிறது.தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் உற்பத்தி செய்துள்ள கொப்பரை தேங்காயினை விற்பனைக்கு கொண்டு வர முதல்கட்டமாக தங்கள் பகுதியில் உள்ள விவசாய அலுவலரை அணுகி

தென்னை சாகுபடி விவசாயி என்பதற்கான அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள வேண்டும்.மேலும் கொப்பரையினை தங்களது தோட்டத்தில் பயிரிட்டதற்கு ஆதாரமாக கிராம நிர்வாக அலுவலர், வேளாண்மை உதவி இயக்குநர், வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர் ஆகியோரிடம் தேவைப்படும் சான்றுகளை பெற்று பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதற்கு பிறகு முன்னுரிமை அடிப்படையில் கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்யப்படும். இவ்வாறு அவர் பேசினார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு எம்.பி.,செல்வக்குமார சின்னையன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈரோடு கிழக்கு தென்னரசு, மொடக்குறிச்சி சிவசுப்பிரமணி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ராமதாஸ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) விஸ்வநாதன், வேளாண்மை அதிகாரி மகாலிங்கம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கிருஷ்ணராஜ், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் தெய்வநாயகம், துணைப்பதிவாளர்கள் மீனாஅருள், அழகிரி, மேலாண்மை இயக்குநர் கந்தராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அவிநாசியில் கொப்பரை கொள்முதல் மையம் திறப்பு

அனுப்பர்பாளையம், ; அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை கொள்முதல் மைய திறப்பு விழா நேற்று நடைபெற்றது. சங்கத் தலைவர் சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். சரக துணைப் பதிவாளர் பழனி, கூட்டுறவு சங்க மேலாண்மை இயக்குநர் மோசஸ் ரத்தினம்பிள்ளை, சங்க மேலாளர் சண்முகம், சங்கத் துணைத் தலைவர் ஜெயபால் முன்னிலை வகித்தனர். இதில் வேளாண்மை அலுவலர்கள் (வணிகம்) நித்யா, வினோத்குமார், சரண்யா, கள அலுவலர் கீதா மற்றும் சங்க இயக்குநர்கள் வளர்மதி, தங்கவேல் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இதுதொடர்பாக சங்கத் தலைவர் சுப்பிரமணி கூறுகையில், அரசு ஆதார விலை திட்டத்தின் கீழ், தென்னை விவசாயிகளிடமிருந்து அரவை கொப்பரை கிலோ ரூ.59.50க்கும், பந்து கொப்பரை கிலோ ரூ.62.40க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது. அடையாள அட்டை தேவைப்படும் தென்னை விவசாயிகள் அந்தந்த வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு தேவைப்படும் விவரத்தினை வழங்கி பெற்றுக்கொள்ளலாம். அவிநாசியில் வாரம்தோறும் திங்கள்கிழமை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. தென்னை விவசாயிகள் இந்த அரிய

வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்தார்.

## உடுமலையில் 4 டன் கொப்பரை கொள்முதல்

உடுமலை, : உடுமலை வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை மையத்தில் அரசு சார்பில் கொப்பரை கொள்முதல் நேற்று துவங்கியது. வேளாண்மை கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைக் கழகம் சார்பில் கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. முதல் நாளான நேற்று 4 டன் கொப்பரையை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். கிலோவுக்கு ரூ.59.50 என விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. திரளான விவசாயிகள் இதில் பங்கேற்றனர்.

## ரூ.5 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

அனுப்பர்பாளையம், ; அவிநாசி அருகே சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஏலத்தில் ரூ.5 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் நடைபெற்றது. இந்த வார நடைபெற்ற ஏலத்துக்கு 276 மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. முதல் ரக நிலக்கடலை குவிண்டால் ரூ.5,860 முதல் ரூ.6,200 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ.5,300 முதல் ரூ.5,750 வரையிலும், மூன்றாம் ரகம் ரூ.4,400 முதல் ரூ.4,900 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.5 லட்சத்துக்கு ஏல வர்த்தகம் நடந்தது. இந்த ஏலத்தில் திருப்பூர், தாராபுரம், அவிநாசி, அன்னூர், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், கோபி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 5 வியாபாரிகளும், 48 விவசாயிகளும் பங்கேற்றனர்.

## இலவச கறவைமாடு வளர்ப்பு பயிற்சி

திருச்சி, : திருச்சி கொட்டப்பட்டு கோழி பண்ணை சாலையில், செயலாற்றி வரும் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வரும் 21 மற்றும் 22ம் தேதி ஆகிய 2 நாட்களில் இலவச கறவைமாடு வளர்ப்பு மற்றும் தீவனப்புல் சாகுபடி பயிற்சி நடைபெற உள்ளது. இப்பயிற்சியில், தரமான கறவை மாடுகளை தேர்ந்தெடுக்கும் முறைகள், முறையான பராமரிப்பு, செயற்கை முறை கருவூட்டல், தீவன மேலாண்மை, கன்று பராமரிப்பு, நோய் தடுப்பு முறைகள், மடிநோய் தடுப்பு முறைகள், தீவனப்புற்கள் சாகுபடி, தீவன மரங்கள் வளர்ப்பு பற்றிய முறைகள், ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் பற்றிய 2 நாட்கள் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இந்த கறவை மாடு வளர்ப்பு மற்றும் தீவனப்புல் சாகுபடி பயிற்சியில் சேர விரும்புவோர் வரும் 21ம் தேதி காலை 10 மணிக்குள் கால்நடை பல்கலைக்கழக

பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய அலுவலகத்திற்கு வர வேண்டும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். இவ்வாறு திருச்சி கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியரும், தலைவருமான ரிச்சர்டு ஜெகதீசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## கரூர் பூ மார்க்கெட்டில் மல்லிகை விலை உயர்வு கிலோ ரூ.600க்கு விற்பனை

கரூர் : ஆனி மாத முகூர்த்தம் காரணமாக கரூர் பூ மார்க்கெட்டில் மல்லிகைப்பூக்கள் வழக்கத்தை விட அதிகமாக விலை போனது.கரூர் ரயில் நிலையம் அருகே பூ மார்க்கெட் செயல்படுகிறது. கரூர் மாவட்ட பகுதிகளான லந்தக்கோட்டை, சேங்கல், உப்பிடமங்கலம் மற்றும் திண்டுக்கல், சேலம் ஆகிய மாவட்ட பகுதிகளில் இருந்து மொத்தமாக பூக்கள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. தேவை மற்றும் சீசனுக்கு ஏற்ப பூக்களின் விலையில் மாற்றம் இருந்து வருகிறது. அந்த வகையில், நேற்று கரூர் பூ மார்க்கெட்டுக்கு முகூர்த்தம் காரணமாக மல்லிப் பூ வரத்து குறைவாக இருந்தது. ஆனாலும், தேவை என்பதால் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. வைகாசி மற்றும் ஆனி மாதங்களில் திருமணங்கள் அதிகளவு நடைபெறுவது வழக்கம். ஆனி மாதம் பிறந்ததை அடுத்து தொடர்ந்து திருமண முகூர்த்த நாள் வருகிறது. இதனை முன்னிட்டு, பூக்களின் தேவை அதிகம் என்பதால் கரூர் பூ மார்க்கெட்டுக்கு வந்த பூக்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டன. அதன்படி, மல்லிகை பூ ஒரு கிலோ ரூ.600க்கும், முல்லைப்பூ ஒரு கிலோ ரூ.300க்கும், சம்மங்கி ஒரு கிலோ ரூ.230 வரையிலும், அரளிப்பூ ஒரு கிலோ ரூ.70 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. முகூர்த்த சீசன் காரணமாக மல்லிகைப்பூ அதிக விலைக்கு மார்கெட்டில் விலை போனது. இருப்பினும், முக்கிய தேவை என்பதால் வியாபாரிகள் அதிக விலை கொடுத்து பூக்களை வாங்கிச் சென்றனர். இது குறித்து பூ மார்க்கெட் நிர்வாகிகள் தரப்பில் கூறுகையில், பொதுவாக, இந்த மாதம் மல்லிகைப் பூவுக்கான சீசன் குறைவு, அதன் காரணமாக, மார்க்கெட்டுக்கு குறைந்த அளவில் மல்லிகை பூக்கள் வந்தன. முகூர்த்தம் என்பதால் வழக்கத்தை விட அதிக விலைக்கு மல்லிகைப்பூக்கள் விற்பனை செய்யப்பட்டன. சீசன் ஆரம்பித்ததும், இந்த வகை பூக்களின் விலை குறைய வாய்ப்புள்ளது என்றார்.

## கரூர் பூ மார்க்கெட்டில் மல்லிகை விலை உயர்வு

கரூர் : ஆனி மாத முகூர்த்தம் காரணமாக கரூர் பூ மார்க்கெட்டில் மல்லிகைப்பூக்கள் வழக்கத்தை விட அதிகமாக விலை போனது.கரூர் ரயில் நிலையம் அருகே பூ மார்க்கெட் செயல்படுகிறது. கரூர் மாவட்ட பகுதிகளான லந்தக்கோட்டை, சேங்கல், உப்பிடமங்கலம் மற்றும் திண்டுக்கல், சேலம் ஆகிய மாவட்ட பகுதிகளில் இருந்து மொத்தமாக பூக்கள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. தேவை மற்றும் சீசனுக்கு ஏற்ப பூக்களின் விலையில் மாற்றம் இருந்து வருகிறது. அந்த வகையில், நேற்று கரூர் பூ மார்க்கெட்டுக்கு முகூர்த்தம் காரணமாக மல்லிப் பூ வரத்து குறைவாக இருந்தது. ஆனாலும், தேவை என்பதால் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. வைகாசி மற்றும் ஆனி மாதங்களில் திருமணங்கள் அதிகளவு நடைபெறுவது வழக்கம். ஆனி மாதம் பிறந்ததை அடுத்து தொடர்ந்து திருமண முகூர்த்த நாள் வருகிறது. இதனை முன்னிட்டு, பூக்களின் தேவை அதிகம் என்பதால் கரூர் பூ மார்க்கெட்டுக்கு வந்த பூக்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டன. அதன்படி, மல்லிகை பூ ஒரு கிலோ ரூ.600க்கும், முல்லைப்பூ ஒரு கிலோ ரூ.300க்கும், சம்மங்கி ஒரு கிலோ ரூ.230 வரையிலும், அரளிப்பூ ஒரு கிலோ ரூ.70 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. முகூர்த்த சீசன் காரணமாக மல்லிகைப்பூ அதிக விலைக்கு மார்கெட்டில் விலை போனது. இருப்பினும், முக்கிய தேவை என்பதால் வியாபாரிகள் அதிக விலை கொடுத்து பூக்களை வாங்கிச் சென்றனர்.

## உர மேலாண்மை மென்பொருள் பயிற்சி

ுதுக்கோட்டை : புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில், வேளாண்மை துறையில் உர மேலாண்மை மென்பொருள் பயிற்சியினை மாவட்ட கலெக்டர் கணேஷ் தொடங்கி வைத்தார். வேளாண் விரிவாக்க தொழில்நுட்ப தேசிய இயக்கம், தேசிய மின் ஆளுமை திட்டத்தின் கீழ் வேளாண்மைத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தப்படுகிறது. இதன்படி மத்திய, மாநில அரசுகள் பங்களிப்புடன் வேளாண் விரிவாக்க தொழில்நுட்ப தேசிய இயக்கத்தின் கீழ் தேசிய மின் ஆளுமை திட்டத்தின் மூலம் 5 மாவட்டங்களுக்கான கணினி பயிற்சி மையம் மற்றும் உர மேலாண்மை மென்பொருள் பயிற்சி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு இம்மையத்தில் புதுக்கோட்டை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்களுக்கு வேளாண்

திட்டங்களுக்கான கணினி மென்பொருள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. மேலும் உர மேலாண்மை குறித்தும் பல்வேறு பயிற்சிகளும் விளக்கமாக எடுத்துரைக்கப்படவுள்ளது.தமிழக அரசு விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையில் வேளாண் கடன் தள்ளுபடி, மானிய விலையில் இடுப்பொருட்கள் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. மேலும் மாவட்ட நீர்வழிப்பகுதி மேம்பாட்டு முகமை, ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் மூலம் மானிய விலைகளில் பண்ணை வள மேம்பாட்டு பணிகளின் கீழ் நலத்திட்டங்கள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின்போது, வேளாண்மை இணை இயக்குநர் அண்ணாமலை, துணை இயக்குநர்கள் கந்தசாமி, வைத்தியநாதன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## திருவாரூர் மாவட்டத்தில் குறுவை தொகுப்பு திட்டத்தில் 38,000 ஏக்கர் இலக்கு

வலங்கைமான் : திருவாரூர் மாவட்டத்தில் குறுவை தொகுப்பு திட்டத்தில் 38,000 ஏக்கரில் நடவு மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் மதிவாணன் தெரிவித்தார். இதையடுத்து ஆவூர் ஊராட்சியில் மதுபாலனின் ஒரு ஏக்கர் வயலில் இயந்திரம் மூலம் நாற்று நடுவதற்கு பாய் நாற்றங்கால் தயார் செய்யும் பணியை பார்வையிட்டு நெல்விதைகள் விதைப்பு, அவற்றின் பராமரிப்பு கால அளவு குறித்து கேட்டறிந்தார். மேலும் கோடை உளுந்து சாகுபடி செய்யபட்டுள்ளதை பார்வையிட்டு சென்ற வருடம் மகசூல், இந்த வருடம் மகசூல் குறித்து கேட்டறிந்தார். பின்னர் கலெக்டர் கூறுகையில், குறுவை தொகுப்பு திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டத்தில் 38 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நடவு பணி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கபட்டுள்ளது. இதில் 525 ஏக்கரில் இயந்திரம் மூலம் நடவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 5 ஆயிரத்து 757 ஏக்கர் பாய் நாற்றாங்கால் விடப்பட்டுள்ளது. மீதமுள்ளவைகளுக்கு நாற்றுவிடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. நெல் நுண்ணூட்ட சத்து 12 ஆயிரம் ஏக்கர் பரப்பிற்கும், சிங்சல்பேட் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பிற்கும் விலையில்லாமல் வழங்க இலக்கீடு வழங்கபட்டு 50 மெட்ரிக் டன் நுண்ணூட்டம் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதுவரை 7.2 மெட்ரிக் டன் 1,440 ஏக்கருக்கு விநியோகம் செய்யபட்டுள்ளது என கூறினார். நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் மயில்வாகணன், வலங்கைமான் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தேவேந்திரன் மற்றும் வேளாண் அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.